# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

## அசல் வழக்கு எண். 23/2022

வாதி தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. B. ரம்யா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர் செல்வராஜ் வா.சா.1 | சாதி |
| த/பெ. | மதம் |
| கிராமம் | தொழில் |
| தாலுகா | வயது |

---

முதல் விசாரணை ***21-12-2023.***

நான் இந்த வழக்கின் வாதி. வாதி தரப்பு 1வது சாட்சி. என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண பத்திரத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்து பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன். 09-08-1994ம் தேதியிட்ட தமிழக அரசு எனது பெயரில் கொடுத்துள்ள ஒப்படைப்பு உத்தரவு அசல் **வா.சா.ஆ.-1** ஆகும். 28-04-2017ம் தேதியிட்ட எனது பெயரில் உள்ள நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டா உண்மை நகல் **வா.சா.ஆ.-2** ஆகும். 01-02-2022ம் தேதியில் நான் எனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் அஞ்சல் ரசீதுடன் கூடியது **வா.சா.ஆ.-3** ஆகும். 02-02-2022ம் தேதியிட்ட மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.-4** ஆகும். 09-02-2022ம் தேதியில் பிரதிவாதி அவரது வழக்கறிஞர் மூலம் எனது வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பின் சார்பு நகல் **வா.சா.ஆ.-5** ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க கு.வி, ஒத்தி வைக்கப்படுகிறது.